பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 07 வியாழக்கிழமை 22.12.2022 கதிர் 298

### தமிழகத்தில் கைது செய்யப்பட்ட

## 9 இலங்கையர்களையும் நாட்டுக்கு அழைத்து வர சி.ஐ.டி. நடவடிக்கை

இலங்கை மற்றும் இந்தியாவில் சட்ட விரோத போதைப்பொருள் மற்றும் ஆயுத வர்த்தகம் தொடர்பில், தமிழகம், திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் கைது செய்யப்பட்ட 9 இலங்கையர்களையும் நாட்டுக்கு அழைத்து வருவது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் 8

# கோட்டாவின் கிழக்கு செயலணியை கூண்டோடு கலைத்த ரணில்



### தமிழ், முஸ்லிம்களின் கடும் எதிர்ப்பையடுத்து

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது உருவாக்கப்பட்ட கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான ஜனாதிபதி செயலணியைத் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலைத்துள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், ஊடகவியலாளர் ஒருவர் சமர்ப்பித்த விண்ணப்பத்துக்கு – ஜனாதிபதி செயலகம் வழங்கிய பதிலில் இவ்விடயம் தெரியவந்துள்ளது. 8

## 104 ரோஹிங்கிய அகதிகளும் மிரிஹான தடுப்பு முகாமுக்கு

### படகோட்டி யாழ். சிறையில் மறியலில்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ரோஹிங்கிய அகதிகள் மிரிஹான தடுப்பு முகாமுக்கு அழைத்துச் 8



## காணாமல்போன மீனவர் மாதகலில் சடலமாக மீட்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பலாலி – அன்ரனிபுரம் பகுதியிலிருந்து கடற்றொழிலுக்குச் சென்ற நிலையில் காணாமல்போன மீனவர், மாதகலில் இன்று சடலமாகக் கரையொதுங்கியுள்ளார். 2

## தமிழர் பிரச்சினையைத் தீர்க்காது அரசியல் தீர்வைப் பெற முடியாது

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்காமல் அரசியல் தீர்வைக் காண முடியாது. குறிப்பிட்ட காலவரையறைக்குள் தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து அரசியல் தீர்வைக் காண்பதே எனது நோக்கம் – என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், 2

## அனைத்து மாவட்டங்களுக்கும் தெரிவத்தாட்சி அலுவலர்கள்

### வெளிவந்தது வர்த்தமானி



உள்ளூராட்சிசபைகளுக்கான தேர்தல் கட்டளைச் சட்டத்தின் படி, சகல நிர்வாக மாவட்டங்களுக்கான தேர்தல்தெரிவத்தாட்சி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல், தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நேற்றிரவு வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா உள்ளிட்ட 2

## தொழிலாளியின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டிய இராணுவச் சிப்பாய்

### யாழ். காரைநகரில் சம்பவம்

யாழ்., காரைநகர் சாம்பல் ஓடை கடற்கரைப் பகுதியில் கருவாடு உலர விட்டுக் கொண்டிருந்த தொழிலாளி ஒருவரின் கழுத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கத்தியை வைத்து மிரட்டியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சாம்பல் ஓடை கடற்கரையில் இன்று கருவாட்டைத் 8

## திங்கட்கிழமை விசேட அரச விடுமுறை



எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை விசேட 2

## ஆறு மாதங்களின் பின்தான் உள்ளூராட்சி சபைத் தேர்தல்?

அடுத்த வருடம் மார்ச் மாதம் நடத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் இப்போது கோரப்பட்டாலும் கூட தேர்தல் ஆறு மாதங்களுக்கு பின்பே நடத்தப்படும் என்று அரச தரப்பு வட்டாரம் தெரிவிக்கின்றது.

8 ஆயிரமாக இருக்கும் உறுப்பினர்களின் 2

## டெங்கு மீளவும் தாண்டவம் நோயாளர்கள் அதிகரிப்பு



இலங்கையில் கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் இந்த வாரம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளது.

இதுவரையில் 58 வைத்திய அதிகாரி பிரிவுகள், அதிக ஆபத்தான வலயங்களாகப் பெயரிடப்பட்டுள்ளன என்று 2

## எழிலனை முற்படுத்தும் விவகாரம்: தங்களுக்கு எதுவும் தெரியாதாம்



### கோட்டா, பொன்சேகா கைவிரிப்பு

இராணுவத்தினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனை முற்படுத்தவேண்டும் அல்லது அவருக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்ற நீதிமன்ற உத்தரவு தொடர்பில் தாங்கள் எதையும் அறியவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி 2

## அனைத்து ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுவில் 5 அதிகாரிகள் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான உரையாடல் இன்றைய அரசியல் அரங்கில் பரபரப்பான பேசுபொருளாக உள்ளது.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவும் இது தொடர்பாக இரண்டு மனுக்களை முன்னதாக நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததுடன், அதைப் பரிசீலிக்க ஒரு திகதியையும் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

எவ்வாறாயினும், உள்ளூராட்சி சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் அடுத்த வருடம் மார்ச் மாதத்துக்குள் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த வேண்டும்.

## ஆறு மாதங்களின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கையை 4 ஆயிரமாக அல்லது 5 ஆயிரமாகக் குறைக்கும் நோக்கில் எல்லை நிர்ணய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழுவின் அறிக்கை கிடைப்பதற்கு சில மாதங்கள் எடுக்கும் என்பதால் 6 மாதங்களுக்குத் தேர்தலை ஒத்திப்போடுவதற்கு அரச தரப்பு தீர்மானித்துள்ளது என்று அறியமுடிகின்றது.

இதவேளை, இந்தத் தேர்தலை ஓரிரு மாதங்களுக்கு ஒத்திப்போடுமாறு மொட்டுக் கட்சி உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தத் தேர்தலில் பிரதானமாக 5 கூட்டணிகள் களமிறங்குவதற்குத் தீர்மானித்துள்ளன. 'மொட்டு', ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளின் தலைமையிலேயே இந்தக் கூட்டணிகள் உருவாகவுள்ளன.

சிலவேளை, இந்தக் கூட்டணிகள் மூன்றாக மாறுவதற்கும் வாய்ப்புண்டு என்று கூறப்படுகின்றது.

அதாவது மொட்டு – ஐக்கிய தேசியக் கட்சி கூட்டணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி – சுதந்திரக் கட்சி கூட்டணி ஆகியவை உருவாவதற்கு வாய்ப்புண்டு. அவ்வாறு உருவானால் கூட்டணிகள் மூன்றாக மாறும்.

## எழிலனை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டாபய ராஜபக்சவும், முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ல் சரத் பொன்சேகாவும் தெரிவித்துள்ளனர்.

நான் தற்போது முன்னாள் ஜனாதிபதி. அதேவேளை, முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர். தங்கள் கேள்விக்கு (எழிலன் தொடர்பான நீதிமன்ற உத்தரவு) பதிலளிக்கக்கூடிய நிலைமையில் நான் தற்போது இல்லை. எனினும், நீதிமன்றத்தின் இந்த உத்தரவு தொடர்பில் நான் இன்னமும் அறியவில்லை. எனவே, அறியாத விடயத்துக்குப் பதிலளிக்க நான் விரும்பவில்லை என்று கோட்டாபய ராஜபக்ச தெரிவித்தார்.

அதேபோன்று இந்த உத்தரவு தொடர்பில் இன்னமும் அறியவில்லை என்று சரத் பொன்சேகா கூறினார்.

## திங்கட்கிழமை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சில் இன்று நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் மாநாட்டில், பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சரான பிரதமர் தினேஷ் குணவர்த்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை 25 ஆம் திகதி கிறிஸ்மஸ் தினம் கொண்டாடப்படும் நிலையில், மறுநாள் விசேட அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் (26) ஆழிப்பேரலை (சுனாமி) நினைவேந்தல் தினம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## டெங்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், இந்த வருடத்தில் 72 ஆயிரத்து 903 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கடந்த வருடத்தில், இந்தக் காலப்பகுதியில் பதிவான நோயாளிகளின் எண்ணிக்கையைக் காட்டிலும், இந்த வருடத்தில் 40 ஆயிரத்து 998 நோயாளிகள் அதிகமாகப் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்த மாவட்டங்களில் 14 வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது எனத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அந்தப் பிரிவுகளில் நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களைக் கண்டறிந்து அவற்றை ஒழிக்கும் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மக்களைக் கோரியுள்ளது.

## காணாமல்போன.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலாலி, அன்ரனிபுரம் பகுதியைச் சேர்ந்த இராயப்பு ரொபேட் கெனடி (வயது 54) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடற்றொழிலுக்குச் சென்ற வேளை காணாமல்போயிருந்தார்.

காணாமல்போனவரை மறுநாள் திங்கட்கிழமை சக மீனவர்கள் தேடிச் சென்ற சமயம், அவரின் படகு கடலில் கவிழ்ந்த நிலையில் காணப்பட்டது. தேடிச் சென்றவர்கள் குறித்த படகை மீட்டு கரை சேர்த்தனர்.

இந்நிலையில், காணாமல்போன மீனவரின் சடலம் இன்று காலை மாதகல் கடற்கரையில் கரையொதுங்கியுள்ளது.

இது குறித்து இளவாலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழர் பிரச்சினை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பேச்சுக்கள் சுமுகமாக ஆரம்பமாகியுள்ளன. தமிழ்த் தரப்பினரின் கோரிக்கைகள் சாதகமாகப் பரிசீலிக்கப்படுகின்றன.

சம்பந்தன், சுமந்திரன், விக்னேஸ்வரன் போன்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்னிடம் முன்வைத்த கோரிக்கைகளைப் படிப்படியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுத்துள்ளேன்.

இந்த விவகாரத்துடன் தொடர்புபட்ட அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளைத் தமிழ்த் தரப்பினருடன் கலந்துரையாட வழியமைத்துள்ளேன்.

தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்காமல் அரசியல் தீர்வைக் காண முடியாது. எனவே, குறிப்பிட்டகாலவரையறைக்குள் தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து அரசியல் தீர்வைக் காண்பதே எனது நோக்கம். பிறக்கும் புத்தாண்டு நல்லதொரு ஆண்டாக – அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் ஆண்டாக அமையும் என நம்புகின்றேன் –என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## வரவேற்கத்தக்க முடிவு

பௌத்த – சிங்களப் பேரினவாத வாக்குகளை மட்டும் நம்பியே ஜனாதிபதி தேர்தலில் நின்று, பெரு வெற்றியீட்டிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தமது சுமார் இரண்டரை ஆண்டு கால நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவிக் காலத்தில் அந்தப் பேரினவாதத் திமிர்தனப் போக்கையே தமது ஆட்சி முறையாகவும் வரித்துக் கொண்டார்.

அதன் வெளிப்பாடாகப் பல ஜனாதிபதி செயலணிகளை உருவாக்கினார். அதில் ஒன்று 'ஒரே நாடு; ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணி. கோட்டாபய பதவியை விட்டு ஓட முன்பு அந்தச் செயலணி தனது பரிந்துரை அறிக்கையை சமர்ப்பித்திருந்தது. கோட்டாவின் பதவி விலகலுடன் அந்தப் பரிந்துரை அறிக்கை எந்தக் குப்பை கூடைக்குள் போனது என்பது தெரியவில்லை.

அதேபோல பேரினவாதத்தின் பெரும் திமிர்த்தனத்தை பிரதிபலித்த மற்றொன்று –கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான ஜனாதிபதி செயலணி.

இந்திய – இலங்கை ஒப்பந்தம் மூலம் தமிழர்களின் பாரம்பரிய தாயகப் பிரதேசம் எனக் கொழும்பு அரசினால் ஏற்று, அங்கீகரிக்கப்பட்டு, ஒப்புக்கொள்ளப்பட்ட கிழக்கு மாகாணத்தை, பௌத்த – சிங்கள பூமியாகக் கபளீகரம் செய்து மாற்றும் கோட்டா ஆட்சிப் பீடத்தின் கபடத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட அரச ஆதரவு பொறிமுறையே இந்தச் செயலணி.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான மேஜர் ஜெனரல் கமல் குணரத்தினவின் தலைமையில் தீவிர போக்கு பௌத்த மதவாதிகள் 16 பேரை உள்ளடக்கி, இந்தச் செயலணி அமைக்கப்பட்டது. கடும் எதிர்ப்பு கிளம்பியமையால் சில காலத்தின் பின்னர் பெயருக்குதலா ஒவ்வொரு முஸ்லிம், தமிழ் பிரதிநிதிகள் அதில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

கடந்த ஜூலையில் அதிகாரத்துக்கு வந்த புதிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தீர்மானத்துக்கு அமைய அடுத்த மாதம் ஒகஸ்ட் மூன்றாம் வாரத்தில் இருந்தே அந்தச் செயலணி கலைக்கப்பட்டு விட்டதாக தற்போது செய்திகள் வெளியாகி உள்ளன.

2020 ஜூன் இரண்டாம் தேதி அமைக்கப்பட்ட இந்த இந்தச் செயலணி 2022 ஒகஸ்டில், சுமார் இரண்டு ஆண்டுகள் செயற்பாட்டின் பின்னர் கலைக்கப்பட்டு இருக்கின்றது.

பௌத்த – சிங்கள மேலாண்மைத் திமிர்த்தனத்தை நிலை நிறுத்தும் கபட – வஞ்சக – திட்டத்துடன் முன்னைய பேரினவாத அரசினால் எடுக்கப்பட்ட இத்தகைய நடவடிக்கைகள், சத்தம் சந்தடியின்றி திருத்தியமைக்கப்பட்டிருக்கின்றமை சமாதான முயற்சிகளுக்கும், மீள் நல்லிணக்கத்தை கட்டி எழுப்பும் எத்தனங்களுக்கும் பெரும் ஊக்கமாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

## யாழ். சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு அதிக பதக்கங்கம் பெற்றமைக்கு கௌரவம்!




அரச திணைக்களங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி சிறைச்சாலை திணைக்களத்துக்காக அதிக பதக்கங்களைப் பெற்ற வீரர்கள் யாழ்ப்பாணத்தில் கௌரவிக்கப்பட்டனர்.

வெற்றி பெற்றவர்களை வவேற்கும் நிகழ்வு இன்று (வியாழக்கிழமை) யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் மற்றும் உத்தியோகத்தர்களால் நடைபெற்றது.

யாழ் சிறைச்சாலையின் வீரர்களான யூட் பீரிஸ் உயரம் பாய்தல் போட்டியில் வெள்ளி பதக்கத்தையும், ரி.சி.அன்ரு குண்டு போடுதல் போட்டியில் வெள்ளி பதக்கத்தையும் தட்டெறிதலில் வெண்கல பதக்கத்தையும் பெற்றனர்.

எஸ்.சியானியஸ் ஈட்டி எறிதல் போட்டியில் தங்க பதக்கத்தையும், எச்.ஜே.அபேயரத்தன 110 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் வெண்கல பதக்கத்தையும், ஜே.றொகான் 4 ஆயிரத்து ஸ400 மீற்றர் அஞ்சல் ஓட்டம் வெண்கல பதக்கத்தையும் 4 ஆயிரத்து ஸ100 அஞ்சல் ஓட்டத்தில் வெண்கல பதக்கத்தையும் என மொத்தமாக 7 பதக்கங்களைப் பெற்றனர்.

## 2022 ஆம் ஆண்டு வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வலி.மேற்கு பிரதேச சபையில் இரத்ததான நிகழ்வு!



2022 ஆம் ஆண்டு வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் மண்டபத்தில் இரத்ததான நிகழ்வு நடைபெற்றது.

இன்று (வியாழக்கிழமை) வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன் அவர்களது ஏற்பாட்டில் இந்த நிகழ்வு ஆரம்பமானது.

இந்த நிகழ்வுவில் பிரதேச சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## யாழில் சிறு உற்பத்தியாளர்களின் கண்காட்சியும் விற்பனையும் நடந்தது!



யாழ். மாவட்ட சிறு உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை கண்காட்சியும் விற்பனையும் இன்று (வியாழக்கிழமை) காலை வடமாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்னால் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பார்வையிட்டதுடன் பொருள்களையும் கொள்வனவு செய்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை விற்பனை செய்யும் நோக்கில் அவர்களுக்கான சந்தை வாய்ப்பை விரிவுபடுத்தும் நோக்கிலும் மேற்படி விற்பனையும் கண்காட்சியும் இடம்பெற்றது.

வடமாகாணகூட்டுறவுதிணைக்களம் மற்றும் வட மாகாண ஆளுநர் செயலகம் இணைந்து இந்தக் கண்காட்சியையும் விற்பனையையும் ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## கடலட்டை பண்ணையால் கடற்றொழில்கள் பாதிப்பு!

### ஆளுநருக்கு மகஜர்



கடலட்டை பண்ணையால் கடற்றொழில் பாதிப்பு எனத் தெரிவித்து அனலைதீவு கடற்றொழிலாளர் சங்கம் வடமாகாணஆளுநருக்கு மகஜர் கையளித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் அனலைதீவு பகுதியில் கடற்றொழிலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் கடலட்டை பண்ணை அமைக்கப்பட்டுள்ளது.

இவற்றை உடன் அகற்றுமாறு கோரி அப்பகுதி கடற்றொழிலாளர்கள் சார்பில் நேற்று (புதன்கிழமை) வடக்கு மாகாண ஆளுநருக்கு மகஜர் கையளிக்கப்பட்டது.

இந்த மகஜரை யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா கையளித்தார்.

# உக்ரைன் அதிபர் அமெரிக்காவுக்கு; ரஷ்ய அதிபர் புடின் பெலாரஸுக்கு!

## இரு தலைவர்களும் திடீர் பயணங்கள்





வொஷிங்டன்,டிச.22

உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி திடீர் பயணமாக நேற்று அமெரிக்கா சென்றுள்ளார். போர் தொடங்கிய பிறகு அவர் மேற்கொண்டுள்ள முதல் வெளிநாட்டு பயணம் இதுவாகும்.

உக்ரைனுக்கும், ரஷ்யாவுக்கும் நீண்டகாலமாக மோதல் நீடித்து வந்த சூழலில் உக்ரைன் தனக்கான பாதுகாப்பு அரணை உருவாக்க அமெரிக்கா, கனடா மற்றும் 28 ஐரோப்பிய நாடுகளை உள்ளடக்கிய உலகின் வலுவான இராணுவக் கூட்டமைப்பான நேட்டோவில் இணைய முயற்சித்தது.

அப்படி நடந்தால் நேட்டோ அமைப்பால் தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என கருதிய ரஷ்யா, உக்ரைன் மீது போர் தொடுத்து அந்த நாட்டை ஆக்கிரமிக்க முடிவு செய்தது. அதன்படி சிறப்பு இராணுவ நடவடிக்கை என கூறி கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி உக்ரைன் மீது ரஷியா போரை தொடங்கியது.

இந்த போர் நாளை மறுநாளுடன் 10 ஆவது மாதத்தை நிறைவு செய்கிறது.

இலங்கைப் பணத்தில் சுமார் ஏழரை லட்சம் கோடி ரூபா பெறுமதியான இராணுவ உதவிகளை அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் வழங்கி வரும் நிலையில் அதைக் கொண்டு உக்ரைன் ராணுவம் ரஷ்யப்ப படைகளை துணிவுடன் எதிர்த்து சண்டையிட்டு வருகிறது. பல நாடுகள் ஆதரவாக இருந்தாலும் போரில் உக்ரைனுக்கு பெரும் பக்கபலமாக இருப்பது அமெரிக்காதான். எதிரிக்கு எதிரி தனக்கு நண்பன் என்கிற முறையில் ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைனுக்கு ராணுவ உதவிகளை வாரி வழங்கி வருகிறது அமெரிக்கா.

கடந்த ஜனவரி மாதம் 24 ஆம் திகதியில் இருந்து நவம்பர் 20 ஆம் திகதி வரையிலான காலக்கட்டத்தில் உக்ரைனுக்கு அமெரிக்கா 18.51 பில்லியன் டொலர் (சுமார் 7லட்சத்து கோடி ரூபா) மதிப்பிலான இராணுவ உதவிகளை வழங்கி இருப்பதாக புள்ளிவிவர தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா சென்றுள்ள ஜெலன்ஸ்கி ரஷ்யப் படைகள் உக்ரைன் மீதான தாக்குதல்களை தீவிரப்படுத்தி வரும் நிலையில் அதிக சக்தி படைத்த கூடுதல் ஆயுதங்களை வழங்க அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளை வலியுறுத்தி வருகிறார்.

போர் தொடங்கியதற்கு பிறகு அவர் மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டு பயணம் இதுவாகும். அமெரிக்காவுக்கு செல்லும் முன்பு ஜெலன்ஸ்கி வெளியிட்ட டுவிட்டர் பதிவில், உக்ரைனின் பாதுகாப்பு திறன்களை வலுப்படுத்துவதற்காக நான் அமெரிக்கா செல்கிறேன் என குறிப்பிட்டார். இந்நிலையில் அமெரிக்கா சென்றுள்ள ஜெலன்ஸ்கி, இந்த பயணத்தின் ஒரு பகுதியாக வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி ஜோ பைடனை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இதனைத்தொடர்ந்து பேசிய ஜெலன்ஸ்கி, அமெரிக்க காங்கிரஸின் ஆதரவுக்கு நன்றி. ஜனாதிபதிக்கு மிக்க நன்றி, இரு கட்சி ஆதரவுக்கு நன்றி, எங்கள் சாதாரண மக்களின் சார்பாக , அமெரிக்கா மக்களுக்கும் நன்றி என்று கூறினார்.

தொடர்ந்து பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், நம்புவது கடினம், இந்த கொடூரமான போரில் 300 நாள்கள் கடந்து, ஒரு தேசமாக இருப்பதற்கான உக்ரைனியர்களின் உரிமையின் மீது புடின் கொடூரமான தாக்குதலை நடத்தினார். மேலும் அச்சுறுத்தும் காரணத்திற்காக தவிர வேறு எந்த காரணமும் இல்லாமல் அப்பாவி உக்ரேனிய மக்கள் மீது தாக்குதல் நடத்தினார் என்று அவர் தெரிவித்தார்.

முன்னதாக உக்ரைனில் பல மாதங்களாக கடுமையான சண்டை நடந்துவரும் பக்முத் நகருக்கு முன்னறிவிப்பு இன்றி சென்ற உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி அங்கு இஅராணுவ வீரர்களை சந்தித்து கலந்துரையாடினார். அப்போது அங்கிருந்தஜராணுவ வீரர்கள் சிலர் உக்ரைன் தேசியக்கொடியில் தங்களின் கையொப்பங்களை இட்டு ஜெலன்ஸ்கியிடம் வழங்கினர். அந்த கொடியை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனிடம் கொடுக்கும்படி ராணுவ வீரர்கள் கேட்டுக் கொண்டனர். அதன்படி ஜோ பைடனை சந்திக்கும் போது ஜெலன்ஸ்கி அந்த கொடியை வழங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக கடந்த திங்கட்கிழமை ரஷிய அதிபர் புதின் அண்டை நாடான பெலாரஸுக்கு திடீர் பயணம் மேற்கொண்டார். போர் தொடங்கியதில் இருந்து பெலாரஸ் ரஷியாவுக்கு ஆதரவாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

போர் தீவிரமடைந்து வரும் சூழலில் இருநாடுகளின் தலைவர்களும் தங்களின் ஆதரவு நாடுகளுக்கு திடீர் பயணம் மேற்கொண்டிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

## சீனாவில் மீள கொரோனா பரவல்; உலக சுகாதார நிறுவனம் கவலை




ஜெனிவா,டிச.22

சீனாவில் கொரோனா பரவல் மீண்டும் அதிகரித்துள்ள நிலையில், இது தொடர்பாக கவலை தெரிவித்துள்ள உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதோனம் கேப்ரயஸ்,சீனா தடுப்பூசிகள் போடுவதை அதிகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது: உலகில் கொரோனா பாதிப்பு குறைந்து கொண்டே வந்தது. தற்போது சில நாடுகளில் திடீரென்று கொரோனா பாதிப்பு அதிகரிக்கத் தொடங்கி உள்ளது. சீனாவில் உள்ள நிலைமை கவலையளிக்கிறது. சீனாவின் கொரோனா பாதிப்பு பற்றிய விவரங்களை பகிர்ந்து ஆய்வுகள் செய்ய தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். அவர்கள் பகிர்ந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. மேலும் நாட்டில் கொரோனாவை கட்டுப்படுத்த தடுப்பூசி செலுத்த வேண்டும். தடுப்பூசி செலுத்துவதில் சீனா கவனம் செலுத்த வேண்டும். சீனாவுக்கு தேவையான உதவிகளை செய்ய உலக சுகாதார நிறுவனம் தயாராக உள்ளது என்றார்.

## பயங்கரவாதிகளின் பிடியில் சிக்குண்ட பாகிஸ்தான் பொலிஸ் நிலையம் மீட்பு!

### 33 தீவிரவாதிகளும் சுட்டுக் கொலை



இஸ்லாமாபாத்,டிச.22

பாகிஸ்தானில் பயங்கரவாதிகளின் பிடியில் இருந்த பொலிஸ் நிலையம் மீட்கப்பட்டது. இந்த சம்பவத்தில் 33 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர் எனக் கூறப்பட்டது.

பாகிஸ்தானின் கைபர் பக்துங்வா மாகாணம் பன்னு மாவட்டத்தில் உள்ள இராணுவ கன்டோன்மென்ட் வளாகத்தில் பயங்கரவாத எதிர்ப்புப் பொலிஸ் நிலையம் உள்ளது. இங்கு பாகிஸ்தான் தலிபான் உள்ளிட்ட பல்வேறு பயங்கரவாத அமைப்புகளைச் சோந்தவாகள் என்ற சந்தேகத்தின் பேரில், 33 பேரை பொலிஸார் விசாரணைக்கைதிகளாக பிடித்து வைத்திருந்தனா.

ந்த நிலையில் கடந்த ஞயாற்றுக்கிழமை மாலை விசாரணை கைதிகளில் ஒருவர் பொலிஸ்காரரை தாக்கி அவரிடம் இருந்து துப்பாக்கியை பறித்தார். பின்னர் அவர் விசாரணைக்காக அடைத்து வைக்கப்பட்டிருந்த மற்ற கைதிகளையும் விடுவித்ததை தொடர்ந்து, அவர்கள் அனைவரும் சேர்ந்து பொலிஸ் நிலையத்தைக் கைப்பற்றினர். அங்கிருந்த பொலிஸார் அனைவரையும் பணயக்கைதிகளாக பிடித்த பயங்கரவாதிகள், தாங்கள் பாதுகாப்பாக தப்பி செல்ல உதவினால் பிணைக்கைதிகளாக விடுவிப்போம் என கூறினர்.

இது தொடர்பாக பயங்கரவாதிகளுக்கும், இராணுவ அதிகாரிகளுக்கும் இடையே 2 நாள்களாகப் பேச்சுவார்த்தை நடந்து வந்தது. எனினும் சுமுகமான முடிவு எட்டப்படவில்லை.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை பயங்கரவாதிகள் தங்களுக்குள் வாக்குவாதத்தில் ஈடுபடுவதை இராணுவ அதிகாரிகள் அறிந்தனர். இதனை சாதகமாக பயன்படுத்திக்கொண்ட அவர்கள் சிறப்பு அதிரடிப்படை வீரர்களை பொலிஸ் நிலையத்துக்குள் அனுப்பினர். அவர்கள் பயங்கரவாதிகள் 33 பேரையும் சுட்டுக்கொன்று பணயக்கைதிகள் அனைவரையும் விடுவித்தனர். எனினும் இந்த அதிரடி தாக்குதலில் சிறப்பு அதிரடிப்படை வீரர்கள் 2 பேர் பலியாகினர். மேலும் 15 வீரர்கள் படுகாயம் அடைந்தனர்.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு


# இந்தியா வரும் சுற்றுலா பயணிகளுக்கு இன்று முதல் கொரோனா சோதனை!



புதுடெல்லி,டிச.22

இந்தியா வரும் சுற்றுலா பயணிகள் இன்று முதல் ஆர்.டி.பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் என மத்திய சுகாதாரத்துறை மந்திரி மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். சீனா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் கொரோனா பெரும் தொற்று சில நாட்களாக வேகமாக பரவிவருகிறது. இதனை எதிர்கொள்ள இந்தியாவில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நிலையில நாட்டில் நிலவக்கூடிய கொரோனா சூழல் குறித்து மத்திய சுகாதாரத்துறை மந்திரி மன்சுக் மாண்டவியா நாடாளுமன்றத்தில் தாமாகவே முன்வந்து அறிக்கை அளித்தார்.

அப்போது அவர் பேசியதாவது:-

உலகின் பல்வேறு நாடுகளில் கடந்த ஒரு சில நாள்களாக கொரோனா நோய் தொற்று அதிகரித்து வருகிறது. ஆனால் இந்தியாவை பொறுத்தவரை கடந்த ஓர் ஆண்டாக நோய் தொற்று குறைந்து வருகிறது. இந்தியாவில் ஒரு நாளைக்கு 153 புதிய நோய் தொற்று பதிவாகி வரக்கூடிய சூழ்நிலையில் உலக அளவில் இந்த நோய் தொற்று எண்ணிக்கை 5.87 லட்சமாக இருக்கிறது. அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா, பிரான்ஸ், இத்தாலி உள்ளிட்ட நாடுகளில் அதிக அளவில் நோய் தெற்றும், உயிரிழப்பும் ஏற்பட்டு வருகிறது.

ஆனால் இந்தியாவில் மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் கொரோனா பெரும் தொற்று சிறப்பாக சம்மாளி முடிந்தது.

220 கோடிக்கும் அதிகமான கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன்ச். தற்போது உலக அளவில் ஏற்பட்டுள்ள பெரும் தொற்றின் சூழலை மத்திய சுகாதார அமைச்சகம் உன்னிப்பாக கண்காணித்து வருகிறது.

மேலும், கண்காணிப்பு மற்றும் பரிசோதனைகளை தீவிரப்படுத்துவது, பொசிட்டிவ் என்று வரக்கூடிய மாதிரிகளை மரபணு பகுப்பாய்வுக்கு அனுப்புவது உள்ளிட்ட அறிவுறுத்தல்கள் மாநில அரசுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்து வரும் நாள்களில் பண்டிகைகள் வர இருப்பதால் பொதுமக்கள் கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை முறையாக கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை மாநில அரசு கட்டாயமாக்க வேண்டும். சர்வதேச சுற்றுலா பயணிகளை பொறுத்தவரை, இங்கு வருகை தரக்கூடிய அனைத்து பயணிகளையும் ஆர்.டி.பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இன்று முதல் துவங்கி உள்ளது என்று கூறினார்.

## ஆற்றில் பாறை இடுக்கில் மாட்டிய வங்கப் புலி மீட்பு



குவஹாத்தி,டிச.22

அசாம் மாநிலம், குவஹாத்தியில் ஓடும் பிரம்மபுத்திரா ஆற்றில், உமானந்தா கோவில் அமைந்துள்ள தீவை நோக்கி புலி ஒன்று நீந்திச் சென்றதால், அங்கிருந்த பக்தர்கள் பெரும் பீதியடைந்தனர்.

வடகிழக்கு மாநிலமான அசாமின் குவஹாத்தி நகரில் ஓடும் பிரம்மபுத்திரா ஆற்றங்கரையில், தேசிய புலிகள் காப்பகம் அமைந்துள்ளது. இங்குள்ள வங்கப் புலி ஒன்று, ஆற்றில் தண்ணீர் குடித்த போது, தவறி விழுந்து இழுத்துச் செல்லப்பட்டது.

இருந்தும், இந்தப் புலி மிகுந்த தீரத்துடன் நீந்தத் துவங்கியது. இது, ஆற்றின் நடுவே உமானந்தா கோவில் அமைந்துள்ள தீவை நோக்கி நீந்தி வருவதை, அங்குள்ள பக்தர்கள் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர்.


இதையடுத்து, வனத் துறையினருக்கு தகவல் தெரிவித்துவிட்டு, பக்தர்கள் மற்றும் கோவில் ஊழியர்கள் பாதுகாப்பான இடத்துக்குச் சென்றனர்.

உடனே வனத் துறையினர் மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் வந்து, ஆற்றில் நீந்தியபடி தத்தளித்த புலியை மீட்கும் பணியை துவக்கினர்.

நடு ஆற்றில், இரு பாறைகளுக்கு இடையில் சிக்கித் தவித்த புலியை பிடித்து, கூண்டில் அடைத்தனர். மருத்துவப் பரிசோதனைக்குப் பின், காப்பகத்தில் புலி விடப்பட்டது.

இந்த சம்பவத்தால், தீவில் இருந்த கோவில் கடைகள் அனைத்தும் புலியைப் பிடிக்கும் வரை மூடப்பட்டு இருந்தன. ஆற்றில் புலி நீந்தும், 'வீடியோ' சமூக வலைதளத்தில் வேகமாக பரவி வருகிறது.

## வங்கக்கடலில் உருவானது புதிய காற்றழுத்த மண்டலம்



வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காற்றழுத்த மண்டலமாக வலுப்பெற்றதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டியுள்ள இந்திய பெருங்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு பகுதி, நேற்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுப்பெற்றது.

இந்நிலையில், இன்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது. இன்னும் 24 மணிநேரத்தில் தென்மேற்கு திசையில் நகர்ந்து கன்னியாகுமரி கடற்பகுதியை நோக்கி வரும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது.

நாகை கடற்கரையிலிருந்து 600 கிலோ மீட்டர் தொலைவில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் நிலை கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், தமிழகத்தின் தென் கடலோர மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, அந்தமான் அருகே வங்கக்கடலில் உருவான மாண்டஸ் புயல் கடந்த டிசம்பர் 10 ஆம் திகதி சென்னை – மாமல்லபுரம் இடையே கரையை கடந்தது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானில் இருந்து அத்து மீறிய ஆளில்லா விமானம் வீழ்த்தப்பட்டது



பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்குள் நுழைந்த ஆளில்லா விமானம் பஞ்சாபில் உள்ள சர்வதேச எல்லைக்கு அருகே எல்லைப் பாதுகாப்புப் படையால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அதிகாரி ஒருவர் இன்று வியாழக்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து எல்லைப் பாதுகாப்புப் படையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்ததாவது:/

இந்திய – பாகிஸ்தான் எல்லையில் அமிர்தசரஸ் பகுதியில் அவ்வப்போது பாகிஸ்தான் விமானம் வருவதும் அதனை எல்லை பாதுகாப்புப் படையினரால் சுட்டுவீழ்த்துவதும் அடிக்கடி நடந்து வருகிறது.

இந்நிலையில், பஞ்சாபின் டர்ன் தரன் மாவட்டத்தின் ஃபெரோஸ் பூர் செக்டரில் உள்ள ஹர்பஜன் எல்லைச் சாவடி அருகே பாகிஸ்தானின் ஆளில்லா விமானம் பறந்தது. உடனடியாக எல்லை பாதுகாப்புப் படையினர் அதனை நேற்றுப் புதன்கிழமை இரவு 8 மணியளவில் சுட்டு வீழ்த்தினர்.

வியாழக்கிழமை காலை அப்பகுதியில் நடத்தப்பட்ட தேடுதலின் போது, விவசாய நிலத்தில் கிடந்த ஆளில்லா விமானம் மீட்கப்பட்டது என்று கூறினார்.

மேலும், பாகிஸ்தானிலிருந்து ஆளில்லா விமானத்தில் இருந்து ஏதேனும் வெடிபொருள்கள் கீழே விழுந்ததா என தேடும் பணியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்று கூறினார்.

# ஓட்டமாவடியில் உணவகங்கள் மீது 3 நாள்கள் தொடர்ந்து பரிசோதனை





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு உணவகங்களின் தரத்தைப்பேணும் வகையிலும் வாடிக்கையாளர்களுக்கு சுத்தமான உணவு கிடைக்க வேண்டுமெனும் நோக்கிலும் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் தொடர்ச்சியாக 3 நாட்கள் ஓட்டமாவடி பிரதேசத்திலுள்ள உணவகங்கள், பேக்கரிகள் மற்றும் இறைச்சிக்கடைகள் மீது பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி எம்.எச்.எம்.தாரிக் தலைமையில் மேற்பார்வையில்,பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஏ.எல். நௌபரின் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்த பரி சோதனை நடவடிக்கையில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களான ஏ.கே.ஜௌபர், என்.எம்.ஷியாம், யூ.எல்.எம்.ஜின்னாஹ் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது, சுத்தமில்லாமல் உணவகங்களில் பாவிக்கப்பட்ட உணவு பரிமாறும் பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சுகாதார அதிகாரி அலுவலகத்தின் வழிகாட்டுதல்களைப் பேணாத பேக்கரி மற்றும் உணவகம் சுகாதாரத் தரப்பினரால் மூடப்பட்டு கடும் எச்சரிக்கை விடுப்பட்டுள்ளது. அதே நேரம், சுத்தமில்லாமல் உணவகங்களில் பாவிக்கப்பட்ட உணவு பரிமாறும் பொருள்கள் கைப்பற்றப்பட்டு சுகாதாரத் தரப்பினரால் அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியகலாநிதி குணசிங்கம் சுகுணனின் அறிவுறுத்தலுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் தொடர்ச்சியாக இச்செயற்பாடு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது

## கல்முனை பஸ் நிலையத்திற்கு வரும் பஸ்களுக்குக் கட்டணம்




(பாறுக் சிஹான்)

கல்முனை பிரதான பஸ் நிலையத்தில் இருந்து சேவையில் ஈடுபடும் பயணிகள் போக்குவரத்து பஸ்களுக்கு தரிப்புக் கட்டணம் அறவிடும் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது.

இத்திட்டம் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நேற்று புதன்கிழமை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி, பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், கணக்காளர் கே.எம்.றியாஸ், வருமானப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் எம்.ஏ.அஹத், தனியார் போக்குவரத்து அதிகார சபையின் கல்முனை நிலைய பொறுப்பாளர் ஏ.எம்.கரீம் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

கல்முனை மாநகர சபையின் பொதுச் சபை அமர்வில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக இக்கட்டணம் அறவிடும் நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கிறது.

இதன் பிரகாரம் கல்முனை பிரதான பஸ் நிலையத்திற்கு வந்து செல்லும் இலங்கை போக்குவரத்து சபையின் கல்முனை பஸ் டிப்போவுக்குரிய பஸ்களைத் தவிர ஏனைய அனைத்து இ.போ.ச. மற்றும் தனியார் பஸ்களுக்கும் இக்கட்டணம் அறவிடப்பட்டவுள்ளது.

குறுந்தூர பயணத்தில் ஈடுபடும் பஸ்களுக்கு ஒவ்வொரு தடவையும் 100 ரூபாவும் நெடுந்தூர பயணத்தில் ஈடுபடும் பஸ்களுக்கு 200 ரூபாவும் அறவிடப்படவுள்ளது.

## மண்முனை மேற்கில் இடம்பெற்ற மட்டு முயற்சியாண்மை கண்காட்சி




(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மண்முனை மேற்கு சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் மட்டு. முயற்சியாண்மை

மண்முனைமேற்குபிரதேசமட்டக்கண்காட்சியானது வவுணதீவு பொதுச்சந்தை முன்பாக பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கௌரவ விருந்தினர்களாக மண்முனை மேற்கு உதவி பிரதேச செயலாளர் திருமதி.சுபா சுதாகரன், கணக்காளர் ச.சுந்தரலிங்கம், பிரதிட்டமிடல் பணிப்பாளர் செ.சபேஷ், நிருவாக உத்தியோகத்தர் எம்.எஸ்.எம் றஊப், மட்டக்களப்பு மாவட்ட செயலக மேற்பார்வை உத்தியோகத்தர் ரி.நிலோன், மண்முனை மேற்கு பிரதேச சமுர்த்தி முகாமையாளர் திருமதி.க.வாமதேவன், சமுக சேவை உத்தியோகத்தர் திருமதி.சி.சிவநாயகம் மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.அரசகுமார் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

## திருமலையில் ஒளிவிழா

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒளி விழா நிகழ்வுகள் நேற்று மாவட்ட செயலகத்தில் திருமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் அனைத்து மதங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அந்தந்த மதங்களின் விசேட நிகழ்வுகளை எவ்வித வேறுபாடுமின்றி நிறைவேற்றி வருகின்றனர் எனவும், இவ்விடயம் சமூகத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைவதாகவும், இவ்வொருங்கிணைப்பு நிகழ்வுகளுக்கு மாத்திரம் வரையறுக்கப் படாமல் ஏனைய விடயங்களிலும் நிலையானதாக பேணப்படும்போது தேசிய நல்லிணக்கத்தை மேலும் வலுசேர்க்க முடியும் என்றும் இதன்போது அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

நத்தார் செய்தி அருட்தந்தை நியூமன் அவர்களினால் முன்வைக்கப்பட்டது. சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இதன்போது அரங்கேறின. கலந்து கொண்ட சிறுவர்களுக்கு நத்தார் பரிசில்களும் அரசாங்க அதிபர் உட்பட அதிகாரிகளினால் வழங்கிவைக்கப்பட்டன.

திருகோணமலை பான் ஏஷியா வங்கி, லீட்ஸ் நிறுவனம் மற்றும் வேல்ட் விசன் நிறுவனம் ஆகியன இந்நிகழ்வுக்கான அனுசரணையை வழங்கிருந்தன.

மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட செயலக பதவி நிலை அதிகாரிகள், பான் ஏஷியா வங்கியின் திருகோணமலை கிளை முகாமையாளர் உள்ளிட்ட அதிகாரிகள், விசேட தேவையுடைய சிறுவர்கள் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.




காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



# கொழும்பு மாநகர வரவு – செலவுதிட்டம் 88 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்!

2023 ஆம் ஆண்டுக்கான கொழும்பு மாநகர சபையின் வரவு – செலவுத் திட்டம் 88 மேலதிக வாக்குக ளால் நிறைவேற்றப்பட்டது. வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 94 வாக்குகளும், எதிராக 6 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

ஐக்கிய தேசிய கட்சியின் அதிகாரத்தின் கீழ் செயற் படும் கொழும்பு மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் மாநகர மேயர் ரோசி சேனாநாயக்கவால் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் இடம்பெற்றது. மாலை 6 மணி வரை நடந்த விவாதத்தின் பின்னர் வாக்கெடுப்பு இடம்பெற்றது.

மாநகர சபையில் மேயர் உட்பட மொத்தமாக 119 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். வாக்கெடுப்பில் மொத்தமாக 100 உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

வாக்கெடுப்பின்போது ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து சிறிலங்கா சுதந்திர கட்சி, ஜனநாயக மக்கள் முன்னணி, ஐக்கிய சமாதான கூட்டணி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் எதிர்க்கட்சியில் இருக்கும் சுயாதீன உறுப்பினர்கள் வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

மக்கள் விடுதலை முன்னணியின் 6 உறுப்பினர்கள் மாத்திரம் வரவு – செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்தனர்.

அதன் பிரகாரம், மொத்தமாக அளிக்கப்பட்ட 100 வாக்குகளில் 94 வாக்குகள் ஆதரவாகவும், 6 வாக்குகள் எதிராகவும் அளிக்கப்பட்டன. அதனடிப்படையில், 88 மேலதிக வாக்குகளால் கொழும்பு மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

கொழும்பு மாநகர சபையின் அடுத்த வருடத்தில் எதி ர் பார்க்கப்படும் மொத்த வருமானம் 17 ஆயிரத்து 854.99 மில்லியன் ரூபாவாகவும், (17,854,991,000 ரூபா) மொத்த செலவு 17 ஆயிரத்து 854.09 மில்லி யன் ரூபாவாகவும் (17,854,087,350 ரூபா) மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

## மனைவி உடம்பில் மின்னழுத்தி வைத்து தீ காயங்களை ஏற்படுத்தினார் கணவர்!

### ஹாலி – எல பொலிஸாரால் கைது

வாக்குவாதம் முற்றி வாய்த்தகராறு ஏற்பட்டு மனைவியின் உடலின் பல பாகங்களில் மின் அழுத்தி யை வைத்து தீகாயங்களை ஏற்படுத்திய சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட் டார் என ஹாலி -எல பொலிஸார் தெரிவித்தனர்.

ஹாலி-எல பிரதேசத்தில் வசிக்கும் 35 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரின் மனை வியான 28 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயே தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண் துணிகளை மின் அழுத்தி யால் அழுத்திக் கொண் டிருந்தபோது கணவருடன் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அவரது கையிலிருந்த மின் அழுத்தி யை பறித்து மனைவியின் முகம், கழுத்து மற்றும் முதுகில் அழுத்தினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தம்பதியினருக்கு இடையில் அடிக்கடி தகராறு ஏற்பட்டு பின்னர் பெண் அடிக்கடி தாக்கப்படுவது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

மேலும், அவரது உடலில் ஏற்கனவே பல தீக்காயங்கள் ஏற்பட்ட தழும்புகள் இருந்தமையும் தெரிய வந்துள்ளது.

சந்தேக நபரை நீதிமன் றில் ஆஜர்படுத்த பொலி ஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

## அரநாயக்க விபத்தில் மாணவன் உயிரிப்பு!

### 13 பேர் காயம்

அரநாயக்க - செலாவ பகுதியில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 13 பேர் காயமடைந்துள்ளனர்.

பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி கவிழ்ந்ததாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

14 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர்கள் அரநாயக்க மற்றும் மாவனெல்ல வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## போதைவஸ்துப் பாவனையை தடுப்பதற்காக தென்கிழக்குப் பல்கலையில் உடன்படிக்கை





(நூறுல் ஹுதா உமர்)

இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தி ன் கலை கலாச்சாரப் பீடத்திற்கும் இலங்கை மது மற்றும் போதைவஸ்து தகவல் நிலையத்திற்கும் (ADIC) இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை யொன்று அப்பீடத்தின் கேட்போர் கூடத்தில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தம் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் மது, புகையிலை மற்றும் போதைப் பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வையும் அறிவையும் ஊட்டி, பிராந்திய, சமூக பிரச்சினை களை கையாளச் செய்தல் எனும் கூட்டு நோக்கத்தி னை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப் பட்டது. கலை, கலாச்சார பீடத்தின் பீடாதிபதி பேராசி ரியர் எம்.எம் பாஸில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். இப்புரிந்துணர்வு உடன்படிக்கை யினூடான நிகழ்ச்சித்திட்டமானது சமூகவியல் துறை மாணவர்களை வலுவூட்டுவதை அடிப்படை யாகக் கொண்டதாக அமைந்திருந்தது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை சமூகவியல் துறையின் தலைவர் பேராசிரியர் எஸ்.எம் அய்யூப் நிகழ்த்தினார். பின்னர் ஒப்பந்தம் தொடர்பான பின்புல விளக்கங்களை உணவு மற்றும் ஔடத முன்னாள் பரிசோதகர் எஸ்.தஸ்தகீர் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, தலைமை உரையை பீடாதிபதி பேராசிரியர் எம்.எம் பாஸில் ஆற்றினார். பின்னர் இலங்கை மது மற்றும் போதைவஸ்து தகவல் நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் புபுது சுமணசேகர சிறப்புரை நிகழ்த்தினார்.

அவர் தனது உரையில், சர்வதேச அனுபவங்க ளோடு கூடிய உள்நாட்டில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய போதைவஸ்து பாவனையை தடுப்பதற் கான அணுகுமுறைகள் குறித்த பரந்துபட்ட தனது பார்வையை வெளிப்படுத்தினார்.

ADIC க்கின் சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் ஏ.சி.றஹீம் தனது உரையில் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் முறைபற்றி விளக்கமளித்தார்.

அதனைத் தொடர்ந்து, இந்நிகழ்வின் பிரதம அதிதி தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் உரையாற்றினார். ன வேண்டுகோள் விடுத்தார்.

இதன் பின்னர் மாணவர்கள் தங்களது கருத்துக்களை தெரிவிப்பதற்கும் கலந்துரையாடலில் ஈடுபடுவதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து, புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இறுதியாக, நிகழ்வில் நன்றியுரையை சமூகவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எம் றிஸ்வான் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் பதிவாளர், பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், சிரேஷ்ட உதவிப் பதிவாளரகள், உதவி விரிவுரையாளர்கள், போதனை சாரா ஊழியர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் மாண வர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக யாழில் பதிவு!





காணாமல்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பதிவுகள் நேற்று (புதன்கிழமை) மேற்கொள்ளப்பட்டன.

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் காணாமல்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தில் இந்த பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

காணாமல் போன ஆள்கள் தொடர்பான பதிவுகளை மேற்கொள்வதற்காக அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட நிறுவனத்தின் ஓ.எம்.பி. அலுவலக அதிகாரிகளால் மாவட்டங்கள் தோறும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அதனொரு கட்டமாக யாழ்ப்பாணத்தி லும் மேற்கொள்ளப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் இந்தப் பதிவுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக எதிர்ப்பு நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டதோடு ஒரு சிலர் அதிகாரிகளிடம் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர் தொடர்பான பதிவுகளை மேற்கொண்டு வருகின் றனர்.

அவ்வாறு பதிவுகளை மேற்கொண்டவர்களுக்கு ஆயிரம் ரூபா உதவி கொடுப்பனவும் வழங்கப்பட்ட மையும் குறிப்பிடத்தக்கது.

## 104......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லப்பட்டனர். யாழ். சிறையில் இருந்த 104 ரோஹிங்கிய அகதிகள் மூன்று பஸ்கள் மூலம் இன்று காலை 6 மணியளவில் மிரிஹான தடுப்பு முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மியன்மாரில் இருந்து விரட்டப்பட்ட ரோஹிங்கிய இன முஸ்லிம்கள் பங்களாதேஷில் அமைந்திருந்த அகதி முகாமில் தங்கியிருந்த சமயம் இந்தோனேஷியாவுக்குத் தப்பிச் செல்லும் நோக்கில் படகு மூலம் சட்டவிரோதமாகப் பயணித்தபோதே வடக்குக் கடற்பரப்பில்படகுபழுதடைந்துதத்தளித்தனர்.

இவ்வாறு தத்தளித்தவர்கள் கடந்த 17 ஆம் திகதி இலங்கைக் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டு மறுநாள் 18 ஆம் திகதி கடற்படையினரின் படகு மூலம் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டுவரப்பட்டு மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் அங்கு தங்கவைக்கப்பட்டனர்.

சட்டத்துக்குப் புறம்பாக இலங்கைக் கடற்பரப்பில் மீட்கப்பட்ட 104 ரோஹிங்கிய அகதிகள் மற்றும் அவர்களைச் சட்டத்துக்குப் புறம்பாக நாடு கடத்த முற்பட்ட வலையமைப்புக்கு உதவிய படகோட்டி ஆகியோருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் காங்கேசன்துறைப் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்நிலையில், கடந்த 19ஆம் திகதி 105 பேரும் தடுத்து வைக்கப்பட்ட இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிமன்ற நீதிவான் காயத்திரி சைலவன், அகதிகள் 104 பேரையும் அகதிகளுக்கான ஐ.நா ஆணையகம் பொறுப்பேற்பதாயின் குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் அனுமதி பெற உத்தரவிட்டதுடன் அகதிகள் அனைவரையும் மிரிஹான தடுப்பு முகாமில் தங்க வைக்க உத்தரவிட்டார்.

அத்துடன், நாடொன்றுக்கு 104 பேரையும் கடத்த முயற்சித்த படகோட்டியை எதிர்வரும் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிட்டார்.

அதையடுத்து கடந்த 19 ஆம் திகதி இரவு 8 மணியளவில் 105 பேரும் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர்.

இந்நிலையில், 105 பேரில் விளக்கமறியல் கைதியான படகோட்டியைத் தவிர ஏனைய 104 பேரும் மிரிஹான தடுப்பு முகாமுக்கு இன்று அழைத்துச் செல்லப்பட்டனர்.

## தொழிலாளயின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலாளி ஒருவர் உலர வைத்துக்கொண்டிருந்த வேளை அப்பகுதிக்கு வந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் தொழிலாளியின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி விட்டுச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் குறித்த தொழிலாளி, காரைநகர் கடற்றொழிலாளர் சங்கத்தூக்கும் அப்பகுதி கிராம சேவையாளருக்கும் தெரியப்படுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவத்தைத் தாம் வன்மையாகக் கண்டிக்கின்றனர் என்றும், சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் காரைநகர் கடற்றொழிலாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

## 9 இலங்கை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களம் விசேட வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இதன்படி, தமிழ்நாட்டுக்குச் சென்று அவர்கள் குறித்த எதிர்காலச் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு விசேட குழுவொன்றைப்பெயரிடவுள்ளதாகவும் அத்திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

விரைவில் குறித்த குழுவை இந்தியாவுக்கு அனுப்பி அது தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை மற்றும் இந்தியாவில் சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் ஆயுத வர்த்தகம் தொடர்பில், தமிழகம், திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் இருந்து 9 இலங்கையர்களை இந்தியாவின் தேசிய புலனாய்வு அமைப்பு, கடந்த திங்கட்கிழமை மீண்டும் கைது செய்தது.

பிரேம் குமார் எனப்படும் குணா என்ற சி.குணசேகரன், பூக்குட்டி கண்ணா என்ற புஷ்பராஜா, மொஹமட் அஸ்மின், அழகப்பெரும சுனில் காமினி பொன்சேகா, ஸ்டான்லி கென்னடி பெர்னாண்டோ, லடியா, தனுக்க ரொஷான், வெல்ல சுரங்க என்ற கமகேசுரங்கபிரதீப், திலீபன் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

## கோட்டாவின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த செயலணியை 2020ஆம் ஆண்டு ஜூன் 2ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ச நியமித்தார். அப்போதே இந்த நடவடிக்கைக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டனர்.

தமிழர்களும், முஸ்லிம்களும் பெரும்பான்மையான வாழும் கிழக்கு மாகாணத்துக்கென அமைக்கப்பட்ட அந்தச் செயலணியில், சிங்களவர்கள் மட்டுமே உறுப்பினர்களாக ஆரம்பத்தில் நியமிக்கப்பட்டமையே, அந்த எதிர்ப்புக்கு பிரதான காரணமாக அமைந்தது.

இதையடுத்து, அந்தச் செயலணியில் தமிழர் ஒருவரும், முஸ்லிம் ஒருவரும் உறுப்பினர்களாகப் பின்னர் சேர்க்கப்பட்டனர்.

'தொல்பொருள் உள்ள இடங்கள்' எனத் தெரிவித்து, சிறுபான்மை மக்களின் காணிகளை அபகரிக்கும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபடுவதாக தமிழ், முஸ்லிம் மக்கள் தொடர்ச்சியாக குற்றம்சாட்டி வருகின்றமையின் காரணமாக, கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான ஜனாதிபதி செயலணியை தேவையற்ற ஒன்றாகவே சிறுபான்மை மக்கள் கருதினர்.

இந்தநிலையிலேயே கடந்த ஆகஸ்ட் 22ஆம் திகதி, மேற்படி செயலணியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலைத்துள்ளார் என்று தனது விண்ணப்பத்துக்கு வழங்கப்பட்டுள்ள பதிலில் -ஜனாதிபதிசெயலகம்தெரிவித்துள்ளது என்று குறித்த ஊடகவியலாளர் கூறினார்.

இது தொடர்பில் அந்தச் செயலணியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எஸ்.கே. ஹேனாதீர அந்தப் பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான ஜனாதிபதி செயலணியை ரணில் விக்கிரமசிங்க கலைத்துள்ள நிலையில், அதற்கென வழங்கப்பட்ட கடமைகள் அனைத்தும் புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வெளியிடப்பட்ட 2289/43ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம், குறித்த கடமைகள் மேற்படி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இரண்டு வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் செயற்பட்டு வந்தபோதும், ஜனாதிபதிக்கு எதுவித அறிக்கைகளையும் இந்தச் செயலணி சமர்ப்பிக்கவில்லை.

பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரட்ன தலைமையில் செயற்பட்ட கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர்கள் எவருக்கும் சம்பளமோ, கொடுப்பனவுகளோ தம்மால் வழங்கப்படவில்லை என்றும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாக பின்வருவோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

1. ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரட்ன - செயலாளர், பாதுகாப்பு அமைச்சு (செயலணியின் தலைவர்)
2. எல்லாவல மேதானந்த நாயக்க தேரர்
3. பனாமுரே திலகவங்ச நாயக்க தேரர்
4. வென்டறுவே தர்மகீர்த்தி ஸ்ரீ ரதனபால உபாலி அபிதான அனுநாயக்க தேரர் (அஸ்கிரிய பீடம்)
5. கலாநிதி பஹமுனே சுமங்கல நாயக்க தேரர் (பதிவாளர் - மல்வத்து பீடம்)
6. கலாநிதி மெதகம தம்மானந்த நாயக்க தேரர் (பதிவாளர் - அஸ்கிரிய பீடம்)
7. கலைமாணி அம்பன்வெல்லே ஸ்ரீ சுமங்கல தேரர் (நிர்வாக உறுப்பினர் - மல்வத்து பீடம்)
8. பேராசிரியர் கபில குணவர்த்தன (செயலாளர் - புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு)
9. சிரேஷ்ட பேராசிரியர் அநுர மனதுங்க (தொல்பொருள் பணிப்பாளர் நாயகம்)
10. கீர்த்தி கமகே (காணி ஆணையாளர் நாயகம்)
11. ஆரியரத்ன திசாநாயக்க தென்னகோன் (நில அளவையாளர் நாயகம்)
12. பேராசிரியர் ராஜ் குமார் சோமதேவ (சிரேஷ்ட விரிவுரையாளர் - களனி பல்கலைக்கழகம்)
13. தேசபந்து தென்னகோன் - சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்
14. எச்.டி. அசிங்சலா செனவிரத்ன (காணி ஆணையாளர் - கிழக்கு மாகாணம்)
15. திலித் ஜயவீர (தலைவர், தெரண ஊடக வலையமைப்பு)
16. ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் என்.ஆர். லமாஹேவகே
17. பத்திநாதன் (ஓய்வுபெற்ற மாகாண பிரதம செயலாளர்)
18. முபிசால் அபூபக்கர் (விரிவுரையாளர்)



# தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் முதலிடம் பெற்ற யாழ். செயலகம்!

தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட செயலகம் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டமைக்கான கௌரவிப்புவிழா யாழ்.மாவட்ட செயலக கணக்காளரும் நலன்புரிக் கழகத்தின் தலைவருமான அ. நிர்மல் தலைமையில் நேற்று (புதன்கிழமை) யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் 2020 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அரசதிணைக்களுக்கிடையிலான தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் பங்குபற்றி யாழ். மாவட்ட செயலகம் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டமையை முன்னிட்டு , இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த யாழ். மாவட்ட செயலர் க. மகேசன் ,அர்ப்பணிப்பான வினைத்திறன் மற்றும் விளைத்திறனான செயற்பாட்டாலும், மக்களுக்கு வழங்கிய உன்னதமான சேவையாலும் இந்த வெற்றி கிடைக்கப் பெற்றதாகத் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் , மேலதிக அரசாங்க அதிபர் (காணி), பதவி நிலை உத்தியோகத்தர்கள் , யாழ்ப்பாண மாவட்ட செயலக உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.12.2022 இல் வெளியிடப்பெற்றது.